[4th March 1964

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** தேசிய நெருக்கடி எப்போது தீரும் என்று தெரியாமல் இருக்கிறது. தேசிய நெருக்கடி தீர்ந்த பின்னுலாவது வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது, பிரையாரிட்டி கொடுக்கும் முறையில் மதுரையில் சுப்ரமணியபுரத்தில் கட்ட வேண்டிய மேம்பால வேலையை எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** தேசிய நெருக்கடி இருக்கிறது என்று சொன்னாலும், நாம் சில மேம்பால வேலைகளை எடுத்துக் கொண்டு நடத்திக் கொண்டுதான் வருகிறோம். தேசிய நெருக்கடி தீர்ந்த பின்னல் வேலைகளை எடுத்துக்கொள்ளும்போது சுப்பிரமணியபுரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

### கூவம் நதியில் ஆஸ்பத்திரிக் கழிவு நீர்

*145 கேள்வி.—**திரு. முனு ஆதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய மருத்துவமனையின் (Government General Hospital) பின்புறம் ஓடும் கூவம் ஆற்றில் அம் மருத்துவ மனையின் கழிவுப் பொருள்கள் கலப்பதால் அவ்வயழிாக மின் வண்டியில் செல்பவர்கள் துர்நாற்றம் தாங்கமுடியாது அவதிப் படுவது அரசாங்கம் அறியுமா?

(இ) அவ்வாற்றின் நீர், சென்னை கோட்டையின் மேற்குப்புற வாசலின் அருகில் (near St. George Gate on the western side of Fort St. George) ஓடும் அகழியிலும் கலப்பதால் அப்பாதை வழியே வருவதற்கு இயலாத வகையில் துர்நாற்றம் வீசுவதை அரசாங்கம் அறியுமா?

(உ) இதனை உடனடியாக நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ)** ஜெனரல் ஆஸ்பத்திரியின் சாக்கடை நீர் ஒரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு, இரட்டைக் குழாய் மூலம், ஆஸ்பத்திரியின் வாயிலில் உள்ள சிலைக்கு அருகிலிருக்கும் கார்ப்பொரேஷன் மெயினில் பம்பு செய்து விடப் படுகிறது. மழைநீர் மட்டுமே கூவம் நதியில் விடப்படுகிறது. இந்த இடத்தில் துற்நாற்றம் வீச இது காரணமாக இருக்க முடியாது.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. முனு ஆதி :** கூவம் ஆற்றில் வீசுகின்ற துர்நாற்றத்தை மாற்றுவதற்கு அரசினர் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா? கூவம் ஆற்றிலுள்ள தண்ணீரை கடலில் கொண்டு விடுவதற்கு இப்போது இருக்கின்ற தடைகளை நீக்குவதற்கு சர்க்கார் என்ன முயற்சி எடுத்திருக்கிறது?

4th March 1964]

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கூவம் ஆற்றில் துர் நாற்றம் அடிப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இந்த ஆற்றில் நீண்ட தூரத்திலுள்ள தண்ணீர் எல்லாம் வந்து தேங்கி கிடக்கிறது. அதோடு அந்தத் தண்ணீர் உடனடியாக கடலில் போய் சேறுவதற்கு வழியில்லாத காரணத்தினல் துர்நாற்றம் அடிக்கிறது. கடலில் கொண்டு போய் சேர்ப்பதற்கு முக்கியமாக என்னென்ன திட்டங்களை போட வேண்டுமோ அவைகளை என்ஜினியர்கள் செய்து கொண்டிருக்கிருர்கள். முக்கியமாக இந்த ஆற்றிலுள்ள மண்ணை எடுப்பதற்கு டிரஜ்ஜர் வேண்டும். அதை இந்த நெருக்கடி காலத்தில் அயல்நாட்டிலிருந்து தருவிப்பது கஷ்டமாக இருக்கிறது. இதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். இதைப்பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

**திரு. கே. ஆர். சம்பந்தம்:** இந்தக் கூவம் நதியின் தண்ணீர சமுத்திரத்தில் சேர முடியாமல், அடிக்கடி மண் வந்து தூர்ந்து விடுகிறது. அந்த மண்ணை அடிக்கடி எடுத்து விட்டால் இந்த நாற்றம் இராது. ஆகவே, இதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சி எடுக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஸார், மண்ணை எடுப்பதற்குத்தான் இந்த டிரெட்ஜர் தேவை என்று சொன்னேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்:** கனம் தலைவர் அவர்களே, கூவம் நதியின் துர்நாற்றத்தின் காரணமாக நமது அமைச்சர் திரு. மன்ருடியார் அவர்கள்கூட மிகவும் அவதிப்படுகிருர்கள என்று அறிகிறேன். சில நேரங்களில் சாப்பிடும் போது குமட்டல்கூட வருகிறது என்று சொல்கிருர்கள். ஆகவே, இந்த நிலையை மாற்றுவதற்கு சர்க்கார் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

**திரு. கே. ஆர். சம்பந்தம்:** இப்போதுள்ள 'எக்கானமி டிரைவ்'-இன் காரணமாக இந்த டிரெட்ஜர் இயந்திரம் வருவது தாமதப்படலாம். ஆகவே கூவம் ஆற்றிலுள்ள மண்ணை எடுப்பதற்கு ஆட்களை வைத்துக்கொண்டாவது வேலையை நடத்த முடியாதா ? அவ்விதம் நடத்தினல் ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கும் வழி ஏற்படும். இந்த வேலையையும் சுலபமாக செய்யமுடியும் என்று நம்புகிறேன். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** ஆட்களைக் கொண்டு இந்த வேலையை நடத்த முடியாது. நான் முன்னல் சொன்ன இந்த டிரெட்ஜர் கூடிய சீக்கிரம் வந்துவிடும் என்று நினைக்கிறேன். இந்த இயந்திரத்தின் மூலம் மண்ணை எடுத்தால்தான் இந்த ஆற்றிலுள்ள தண்ணீர் சமுத்திரத்திற்கு போக முடியும்.